17th March 1966]

அமைச்சர்கள் வீடுகளுக்குத் தொலைபேசிகள்

* 329 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அமைச்சர்களின் வீடுகளில் உள்ள டெலிபோன்களுக்கு பில் பணம் சர்க்காரால் கட்டப்படுகிறதா ?

(இ) ஆமெனில் 1964-65-ம் ஆண்டுக்கு ஒவ்வொரு அமைச்சரின் வீட்டிலுள்ள டெலிபோனுக்கும் மாதவாரியாக எவ்வளவு பணம் கட்டப்பட்டது டிரங்க் அண்டு லோகல் சார்ஜஸ் தனித்தனியாக எவ்வளவு என்ற விவரம் சபைமுன் வைக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes. The private call charges in respect of trunk calls and phonograms made by the Ministers including Chief Minister are however collected from the Ministers concerned and credited to Government account.

(b) The information required is furnished in the Statement [a] placed on the Table of the House separately.

திரு. மு. கருணாநிதி : இந்தப் பதிலுக்காக சட்டசபையிலே வைக்கப்பட்டுள்ள ஏட்டிலே, 65 ஜனவரி மாதத்தில் டெலிபோன் டிரங்குகால் செலவு—அந்த சமயத்தில்தான் இந்திக் கிளர்ச்சி நடந்தது—உள்துறை அமைச்சர் கக்கன் அவர்களுக்கு ரூ. 101 என்றும், அதே நேரத்தில் முதல் அமைச்சருக்கு ரூ. 105 என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல பெப்ருவரி மாதத்தில் உள்துறை அமைச்சருக்கு ரூ. 65 தான் ஆகியிருக்கிறது. ஆனால், முதல் அமைச்சருக்கு ரூ. 652-க்கும் மேல் ஆகியிருக்கிறதே ? முக்கியமாக அந்த நேரத்தில் உள்துறை அமைச்சருக்கு அதிகச் செலவு ஆக வேண்டியிருக்க, முதல் அமைச்சருக்கு ஆகியிருப் பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கெல்லாம் காரணம் சொல்ல முடியாது. என்னென்ன கால் என்று கேட்டால் சொல்லத் தயார். சொந்தத்திற்கு போட்ட கால் என்றால், அதற்கு அவரவர் களே பணம் கொடுத்துவிடுகிறோம். டில்லியிலிருந்து டிரங்கு கால் வருகிறது; நாம் அவர்களோடு பேச வேண்டியிருக்கிறது. கால் போடுகிறோம். இதனுலெல்லாம் அதிகச் செலவு ஆகிறது. அரசாங்க அலுவல்களுக்கு மட்டும் சர்க்காரிலிருந்து வசூலிக்கப்பட்டிருக் கிறது.

திரு. மு. கருணாநிதி : தமிழ் நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்ட காலத்தில், உள்துறை அமைச்சருக்கு பல பக்கங்களுக்கும் பேசி, நிலைமையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதனால், செலவு அவர்களுக்கு அதிகமாகலாம். ஆனால் முதல் அமைச்சருக்கு ஆகி யிருப்பதற்கும் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உள்துறை அமைச்சர் என்று இல்லை. முதல் அமைச்சருக்கும் பொறுப்பு இருக்கிறது. இதிலே யெல்லாம் உள்துறை அமைச்சரும் விசாரிக்கலாம். முதல் அமைச்

---

[a] Printed as Appendix on pages 580–591

சரும் விசாரிக்கலாம். முதல் அமைச்சர் 'ஸ்பியர்' உள்துறை அமைச்சர் 'ஸ்பியர்' என்று கிடையாது. ஆனால் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறாரோ, எங்களுக்குள் தகராறு கிடையாது. பொறுப்பை உணர்ந்து, காரியங்களைச் செய்கிறோம். உள்துறை அமைச்சர் சிலவற்றைக் கவனிக்கலாம். வேறு சிலவற்றை நான் கவனிக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஜனவரி மாதத்திலே உள்துறை அமைச்சருக்கு ஆன செலவில், அலுவல் வகையில் ரூ. 101 என்றும், தனிப்பட்ட வகையில் ரூ. 146.50 என்றும் இருக்கிறது அதிகாரிகளை தவிர வேறு தனிப்பட்டவர்களோடும் தொலைபேசியில் அவ்வளவு பேசியிருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிப்பட்டவர்களிடமும் பேசலாம். அப்படிப் பேசினால், கையிலிருந்து பணம் கொடுத்து விடுகிறோம். அதில் கனம் அங்கத்தினருக்கு என்ன ஆட்சேபம் என்று தெரியவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர்கள் தங்களுடைய அலுவலகங்களிலிருந்து பேசும் போது அங்கே உள்ள தொலைபேசிகளை உபயோகிக்கலாம். அதிகாரிகளோடு தொடர்பு கொள்ளலாம். ஆபீசின் மூலம் நடைபெறும் காரியங்களுக்கு வீட்டிலிருந்து போனை உபயோகிக்க வேண்டிய அவசியம் இல்லை. வீட்டிலிருந்து ஆபீசர்களோடு அவ்வளவு அதிகமாகப் பேச வேண்டிய அவசியமும் இல்லை. அப்படியிருக்க ஏன் இவ்வளவு செலவு என்று அறிவிக்கமுடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த நேரத்தில் பேசப்படுகிறது என்பதைப் பொருத்தது. வீட்டிலேயிருந்து பேசும் போது அரசாங்க அலுவலாக இருந்தால், அதிகாரிகளோடு மட்டுமல்ல, மற்ற மந்திரிகளோடும், மத்திய சர்க்காரோடும் மற்ற மாநில சர்க்காரோடும் பேச வேண்டியிருக்கலாம். வீட்டிலிருக்கும்போது என்றால் வீட்டு போன் பயன்படுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், பெரும்பாலும் உத்தியோக தோரணையில் காரியங்கள் செய்ய செக்ரடரி, டெபுடி செக்ரடரி இவர்கள் இருக்கிறார்கள். அமைச்சர் நேரிடையாக மற்ற ஜில்லா அதிகாரிகளோடு பேசி, ரூ. 10,000 வரை செலவழிக்க வேண்டிய அவசியம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஜில்லா அதிகாரிகளோடு அவசியம் இருந்தால் பேசப்படுகிறது. அமைச்சரே பேச வேண்டிய நிமித்தம் ஏற்படுகிறது. மத்திய சர்க்காரோடு பேச வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் டிரங்கு கால் பில் அதிகமாகப் போகிறது. மத்திய சர்க்கார் அமைச்சர் பேசுகிறார்கள். நாம் அவர்களோடு பேச வேண்டியிருக்கிறது. மற்ற மாநில அமைச்சர்களோடு பேச வேண்டியிருக்கிறது. ஆகையினால் அதிகமாகச் செலவு ஆகிறது.

திரு. மு. கருணாநிதி : உள்ளூர் தொலைபேசிச் செலவை சர்க்காரிலிருந்து கொடுப்பதைத் தவிர்க்க உத்தேசம் உண்டா ?

17th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டது, அதன் பிறகு இப்பொழுது இருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை மாற்ற உத்தேசம் இல்லை.

கட்டபொம்மன் வழிவந்தவர்கள்

* 330 கேள்வி—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) வீரபாண்டிய கட்டபொம்மன் இனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் எத்தனைபேர் இருக்கிறார்கள் ?

(இ) அவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது மானியம் கொடுக்கிறதா ?

(உ) ஆமெனில், எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) திருநெல்வேலி மாவட்டம் கோயில்பட்டி தாலுகா, ஆதனூர் கிராமத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனின் வழி வந்தவர்கள் மூவர் இப்போது வசித்து வருகின்றனர்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, இந்த மூவர்களும், அரசாங்கத்திடம் மானியம் கொடுக்க வேண்டும் என்று முறையிட்டு வருவது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்டபொம்மன் குடும்பத்திற்கு பென்ஷன் கொடுக்கப்பட்டது. கட்டபொம்மன் சிறைப்படுத்தப்பட்டபோது, அந்தக் குடும்பம் எட்டு பேர்களைக் கொண்டதாக இருந்தது. அவர்களுக்கு 15 பகோடா (ரூ. 52-8-0) பென்ஷனை பிரிட்டிஷ் ஆட்சியில் கொடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு, அது 40 பகோடா (ரூ. 140) என்று உயர்த்தப்பட்டது. அந்தக் குடும்பம் சிறைப்படுத்தப்பட்டிருந்தது. அதற்காகக் கொடுக்கப்பட்டது. அவர்களுடைய பெருமைக்காக அல்ல. அவர்களில் யாராவது தவறிவிட்டால், மீண்டும் இந்த பென்ஷன் கொடுப்பது பரிசீலிக்கப்படவேண்டும் என்றிருந்தது. கட்டபொம்மன் மகன் இறந்தபோது, இந்த ரூ. 52-8-0 பென்ஷன் அவருடைய மகன் தளவாய் குமாரசாமி தொரை என்பவருக்குக் கொடுக்கப்பட்டது. அவரும் 1920-ல் இறந்தபோது, அந்தப் பென்ஷன் ரூ. 50 ஆகக் குறைக்கப்பட்டு, அவருடைய மகன் ஜயவீர ராம கட்டபொம்மன் கம்பெனி செல்வம் தொரைக்கு கொடுக்கப்பட்டது. 1935-ல் இவரும் இறந்தார். அப்பொழுது, இந்த பென்ஷன் தொகையில் இன்னும் ரூ. 2-8-0 குறைக்கப்பட்டு, அவருடைய சகோதரர் தளவாய் சுப்பிரமணிய தொரைக்கு ரூ. 47-8-0 என்று கொடுக்கப்பட்டது. இந்த பென்ஷனை அதிகப்படுத்த வேண்டும் என்று கோரிக்கைகள் வந்தன. தளவாய் சுப்பிரமணிய தொரைக்கு ரூ. 5 மாத்திரம் என்று அதிகப்படுத்தப்பட்டது. இது 1-11-1944-லிருந்து கொடுக்கப்பட்டது.